[1975 ஏப்ரல் 10

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு இன் ஜினீயரியங் சங்கங்கள் இலாபகரமாக நடந்து கொண்டிருக்கின்றனவா ? அப்படி இலாபகரமாக நடந்து கொண்டிருக்குமாஞல் ஒரு பிளாக்குக்கு இரண்டு மூன்று திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : முதலிலே திட்டமிடப்பட்ட 300 எல்லா இடத்திலும் பூர்த்தியாகவில்லை. அதற்குப் பிறகு மற்ற தைப் பார்க்கலாம். சங்கங்கள் எல்லாமே இலாபத்திலே நடக்கின்றனவா என்ருல், இல்லை. சில நட்டத்திலேதான் நடக்கின்றன. தொடங்கும் போது நட்டம் ஏற்படத்தான் செய்யும். ஆனல், நாளாவட்டத்தில் போகப் போக, மக்கள்தான் அவற்றின் நன்மைகளைத் தெரிந்துகொண்டு, அதிக மான டிராக்டர்களை வாடிக்கையாக விடச் செய்ய வேண்டும், அல்லது தெளிப்பான்களை ரிப்பேர் செய்ய விடுவதன் மூலமோ தான் இலாபமாக நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வந்தவாசியில் இந்த மாதிரி யான சங்கம் ஒன்று $1\frac{1}{2}$ வருடமாக பாங்கியிலே பணம் வாங்கி, ஷேர் காப்பிட்டல் போட்டுக்கூட, துவக்கப்படாமலிருக்கிறது. அது துவக்கப்ப டாமல் காலதாமதம் ஆகிறது, அதிகாரிகளை நியமிக்கவில்லை. இதை விரைவு படுத்தி, உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன குறையை இங்கே குறித்துக் கொண்டேன், விரைவிலே இதை கவனிக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : இந்தப் கூட்டுறவு பொறியியல் சங்கங்கள் தமிழ் நாட்டில் எந்த எந்த ஒன்றியங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் எல்லா ஒன்றியங்களிலும் ஆரம்பிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மொத்தம் 300 என்று சொன்னேன். அதிலே எவ்வளவு தொடங்கப்பட்டன என்ற குறிப்பு கைவசம் இல்லை, எந்த எந்தப் பகுதிகள் என்ற குறிப்பு இல்லை, தனியாக அதைப்பற்றிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரமுடியும்.

டிராக்டர் பணிமனை

* 627 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அண்ணு விவசாய பண்ணை யில் டிராக்டர் சர்வீஸ் சென்டர் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குடுமியான்மலை அண்ணு பண்ணை யிலே டிராக்டர் பழுதுபார்க்கும் திட்டம் ஆரம்பிக்கிற முயற்சி கைவிடப் பட்டுவிட்டதா ? கைவிடப்பட்டது என்ருல் அதை மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கேள்வி டிராக்டர் ரிப்பேர் சென்டர் பற்றி அல்ல, சர்வீஸ் சென்டர் பற்றித்தான், அந்த ஆலோசனை தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : சேலத்தில் கல்வராயன்மலை, சேர்வராயன் மலை இவற்றைத் தவிர ஏர்க்காடு.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கேள்வி 628-ல் வருகிறது. இந்தக் கேள்வியில் அல்ல.

Development of Horticulture

*628 Q.—THIRU N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there is any proposal to introduce a crash programme for the Development of Horticulture in Kalrayan and Kolli Hills and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) : கிராஷ் புரோகிராம் அதாவது தீவிரத் திட்டம் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், அந்தப் பகுதியில் காபித் தோட் டங்களும் டீ தோட்டங்களும் வைப்பதற்கு வசதியிருக்கிறதா ? அதைப்பற்றி ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறதா ? அதன் முடிவு என்ன ? சர்க்கார் என்ன முடிவு செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : காபித் தோட்டங்களும், டீ தோட்டங்களும் இந்த ஹார்டிகல்சர் என்ற குறிப்பிலே வரவில்லை. அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. தி. பொன்னுமலை : கல்வராயன்மலை, சேர்வராயன்மலை, ஏர்க் காடு இவற்றைத் தவிர கொல்லிமலை சிறந்த இடம், நீரூற்று உள்ள இடம், அங்கே ஆராய்ச்சிகள் நடத்தி விவசாயம் முன்னேற ஏற்பாடு செய்யப்படுமா ?